කම්කරු, වෘත්තීය සමිති සබඳතා හා සබරගමුව සංවර්ධන අමාත්‍යාංශය
தொழில் தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு
**Ministry of Labour, Trade Union Relations and Sabaragamuwa Development**

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report
# 2016

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය
தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்
## National Institute of Labour Studies


නො 267, පන්නිපිටිය පාර, පැලවත්ත, බත්තරමුල්ල
இல.267, பன்னிபிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுல்லை.
**No 267, Pannipitiya Road, Palawatta, Battaramulla**

**கௌரவ அமைச்சரின் செய்தி**



தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனமானது, அரச, பகுதி அரச மற்றும் தனியார் துறைகளது வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் 2016ஆம் ஆண்டு முழுவதும் வெற்றிகரமாக பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தொழில் தருனர் / தொழில் பெறுநருகக்கிடையிலான உறவை நேர்மறை ரீதியாக பேணிச் சென்று வினைத்திறன்மிக்க, விளைதிறன்மிக்க ஊழியப்படையை கட்டியெழுப்பும் செயற்பாட்டில், தொழில் தருனர் / தொழில் பெறுநர்கள் ஆகிய இருதரப்பினரதும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் அபிவிருத்தியானது முக்கிய விடயமாகக் கணிக்கப்படுகின்றது. அதனடிப்படையில், இலங்கை ஊழியப்படையை விரிவுபடுத்தி, விளைதிறனான ஊழியப்படையாக மாற்றியமைப்பதற்கு, பல்வேறு துறைகளுடாக தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம் முன்னெடுக்கின்ற பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் நிகழச்சித்திட்டங்கள் மிகச் சிறந்த வினைத்திறன்மிக்க நிகழ்ச்சித்திட்டங்கள் என்பதை எடுத்தியம்புதல் சாலப் பொருத்தமாகும். 2016ஆம் ஆண்டில் நிறுவனத்திலுள்ள உத்தியோகத்தர்களது அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அறிந்து கொள்ளும் போது, அந்நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக பயிற்சிகளைப் பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நேர்மையான மதிப்பீடுகள் என்பன இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு விடயமாக காணப்பட்டதுடன், இந்நிறுவனத்தில் பணிபுரிகின்ற வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் ஊடாக தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனமானது இம்முன்னேற்றத்தை அடைந்து கொண்டுள்ளது.

அதனடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனத்தின் இலக்கை அடைந்து கொள்வதற்கு பாரிய பங்களிப்பைச் செய்த தலைவர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டப்ளியு.டீ.ஜே.செனவிரத்ன

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர்

## கௌரவ தலைவரின் செய்தி



‘‘இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கம்’’ என்பதை நோக்காகவும் ‘‘கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி என்பவற்றின் ஊடாக வினைத்திறனான தொழில் உறவுகளை விருத்தி செய்து பேணிச் செல்லும் பொருட்டு முத்தரப்பு பிரதிநிதித்துவங்களுக்கு வசதிகளை வழங்குதல்’’ என்பதை பணிநோக்காகவும் கொண்ட தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனமானது அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் பாராட்டுதல்களுக்குரியனவாகும்.

ஒரு நாட்டிலுள்ள ஊழியப் படையானது திருப்திகரமானதும், நேர்மறையான எண்ணங்களுடனும் காணப்படுவதும், அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையில் ஈடுபடுவதும், ஒரு நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் மிகுந்த தீர்க்கமான காரணியாக அமைவதுடன், தரம் சார்ந்ததும், அளவு சார்ந்ததுமான சேவைகளை விளைதிறனாக வழங்கும் போதும், அது மிக முக்கியமாகக் காணப்படுகின்றது. வலுவான தொழில் தருனர் - தொழில் பெறுனர் உறவுகளைக் கட்டியெழுப்புதல், அவர்களை அறிவூட்டி திறன்களை விருத்தி செய்தல் மற்றும் தொழில் தருனர் - தொழில் பெறுனரது மனப்பாங்கு விருத்தியை வலுப்படுத்துதல் மூலமாக அரச அல்லது தனியார் நிறுவனங்களது உற்பத்தித் திறனை உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்ல முடியும். அதனடிப்படையில் 8 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையின் ஊழியப்படையின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் விருத்தியானது அத்தியாவசியமாகக் காணப்படுவதுடன், அச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் நடவடிக்கைகளை எடுத்து வருவது பாராட்டத்தக்க விடயமாகும். மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களிடையே, 06 டிப்ளோமாப் பாடநெறிகள், 12 சான்றிதழ் பாடநெறிகள் அத்தோடு பல குறுகிய காலப் பாடநெறிகள் என்பன 2016ஆம் ஆண்டு முழுவதும் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்டமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பல்வேறு வளவாளர்களது உதவி, ஒத்துழைப்புக்களைப் பெற்று செயற்பட்டு வந்துள்ளது.

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 2016ஆம் ஆண்டில் வினைத்திறனான சேவைகளை தேசிய ரீதியில் வழங்கி 2016 ஆம் ஆண்டில் இலக்கு வைக்கப்பட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ஆளனியினரது அளப்பரிய அர்ப்பணிப்புமிக்க சேவையை உளமாற பாராட்டுகின்றேன்.

தலைவர்

எஸ்.எம்.கோத்தாபாய ஜயரத்ன

**பணிப்பாளர் நாயத்தின் செய்தி**



தற்காலத்தில் அரச, பகுதி அரச மற்றும் தனியார் துறைகளில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் செலுத்தப்படும் கவனம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு அத்தரப்பினருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கும் நோக்குடன் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தினூடாக கற்றல் மற்றும் பயிற்சி நெறிகள், பல்வேறு பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் என்பனவற்றை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பங்குபற்றுவோரது பெறுமதியான கருத்துக்கள், முன்மொழிவுகள் என்பனவற்றை பல்வேறு நிறுவனங்களது தேவைப்பாடுகளுக்கும் ஏற்ற விதத்தில், பாடநெறிகளை நவீனமயப்படுத்தி, புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தி, மிகுந்த வினைத்திறனான பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்நிறுவனம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தொழிற் சட்டங்கள் மற்றும் கைத்தொழில் உறவுகள் பிரிவு, மனித வள முகாமைத்துவப் பிரிவு மற்றும் உற்பத்தித் திறன் மேம்படுத்தல் பிரிவு போன்ற இந்நிறுவனத்தின் பிரதான மூன்று பிரிவுகள் ஊடாக 2016ஆம் ஆண்டில் டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள், செயலமர்வுகள் மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பாரிய எண்ணிக்கையிலான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்விதத்தில் இந்நிறுவனத்தின் கவனம், அது தாபிக்கப்பட்டதன் நோக்கத்திற்கமைவாக இந்நாட்டின் ஊழியப் படையை, அவர்களது தனிப்பட்டதும், தொழில்சார் அபிவிருத்தியை நோக்கமாகவும் கொண்டு ஈடுபடுத்தி, அவர்களது அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்காக பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன்போது நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தின் ஆளணியினர் மற்றும் வளவாளர் குழாம் எமக்குத் தந்த பாரிய ஒத்துழைப்புக்கு நாம் நன்றி பாராட்டுகின்றோம். தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் தமது நோக்கத்தை ஒட்டி பயணிப்பதற்கு தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளரிடமிருந்து கிடைத்த வழிகாட்டல்களைப் போன்றே எப்போதும் அவர்கள் அளித்த ஊக்கத்தையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். அவ்வாறே பணிப்பாளர் குழாமின் அனைத்து உறுப்பினர்களதும் உதவி மற்றும் ஒத்துழைப்பும் இவ்வெற்றிக்குப் பங்களிப்புச் செய்தது.

இறுதியாக நிறுவனத்தின் மட்டிலும் நிறுவனத்தின் பாடநெறிகள், பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மட்டிலும் தமது நம்பிக்கையை வைத்து தமது ஆளணியினரை இப்பயிற்சிகளுக்காக அனுப்பி தமது ஒத்துழைப்பை நல்கிய அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சமன் டி வடுகே
பணிப்பாளர் நாயகம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **1.0 நிறுவனத்தின் செயற்பாடுகள்** | 01-06 |
| 1.1 நோக்கு, பணிநோக்கு மற்றும் நிறுவனத்தின் பெறுமதிகள் | |
| 1.2 நிறுவனத்தின் நோக்கங்கள் | |
| 1.3 நிறுவனத்தின் நிருவாகம் | |
| 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு | |
| 1.5 நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் | |
| **2.0 பயிற்சியும் அபிவிருத்தியும்** | **07-17** |
| 2.1 டிப்ளோமாப் பாடநெறிகள் | |
| 2.2 சான்றிதழ் பாடநெறிகள் | |
| 2.3 குறுகிய கால மற்றும் தயாரிக்கப்பட்ட பாடநெறிகள் | |
| 2.4 நிறுவனத்தில் காணப்படும் வசதிகள் | |
| 2.5 வளவாளர்கள் | |
| 2.6 2016ஆம் ஆண்டிற்கான வழிநடத்தல் விசாரணை | |
| 2.7 தொழில் மற்றும் கைத்தொழில் உறவுகள் | |
| 2.8 மனிதவள முகாமைத்துவம் | |
| 2.9 வேலைத்தளத்தின் உற்பத்தித் திறன் | |
| **3.0 நிதிக் கூற்றுக்கள்** | 18-35 |
| 3.1 நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று | |
| 3.2 நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று | |
| 3.3 நிதி சுற்றோட்ட கூற்று | |
| 3.4 மூலதன மாற்றங்கள் அறிக்கை | |
| 3.5 நிதிக் கூற்றுக்களது குறிப்பு | |
| **4.0 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.** | **36-45** |

## தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனம் (NILS)

### 1.0 நிறுவனத்தைப் பற்றி

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனமானது 2007 செம்டெம்பர் 11ஆந் திகதி, 2010ஆம் ஆண்டு 12ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் நியதிச்சட்ட நிறுவனமாக தாபிக்கப்பட்டது. இலங்கையில் தொழிற்கற்கைகளை மேம்படுத்தும் நோக்கில் ஆய்வுகளை நடாத்துதல், ஆராய்ச்சிகளை நடாத்துதல், ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பயிற்சிகளை வழங்கும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிறுவனம் தாபிக்கப்பட்டது. தற்போது, இந்நிறுவனமானது தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

### எமது நோக்கும் பணிநோக்கும்

**1.1 நோக்கு**

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்.

1.1.1 கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சியின் ஊடாக வினைத்திறனான தொழில் உறவுகளைப் பேணுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக முத்தரப்பு பங்குதாரர்களுக்கு வசதிகளை வழங்குதல்.

**பிரதான பெறுமதிகள்**

- சேவைகள் தொடர்பான ஏற்பாடுகள்
- வாடிக்கையாளரை மையப்படுத்துதல்
- ஒத்துழைப்புடன் செயற்படுதல்
- மாற்றத்திற்குத் தயாராகுதல்

## 1.2 நோக்கங்கள்

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை இலக்கு வைத்து அடைந்து கொள்வதற்கு நிறுவனம் பாரியளவில் செயற்பட்டு வருகின்றது.

1. அபிவிருத்திச் செயற்பாடுகளின்போது, ஊழியர்களை தொடர்ச்சியான உதவியாளர்களாக மாற்றுவதற்காக, அவர்களது நலனோம்பலை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்காக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் ஊழியர் கற்கைகள் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
2. தொழிற்கற்கைகள் தொடர்பிலான மாநாடுகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்குப் புறம்பாக சஞ்சிகைகள், காலாண்டு சஞ்சிகைகள் மற்றும் நூல்களை வெளியிடுதல்.
3. தொழிற்கற்கைகளுடன் தொடர்புடைய ஆய்வுகளை நடாத்துதல், மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் கற்கை நெறிகளை நடாத்துதல்.
4. நூலக மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்து அவற்றைப் பேணிச் செல்லுதல்.
5. சமமான நோக்கங்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனும் அமைப்புக்களுடனும் மிக நெருக்கமான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
6. பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களுடன் இணைந்த வகையில் தொழிற்கற்கைகள் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறிகள் உள்ளிட்ட பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் அவ்வாறு தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சான்றிதழ்களையும் டிப்ளோமா சான்றிதழ்களையும் வழங்குதல்.
7. தொழில் நல்லிணக்கத்தைப் பேணுகையில், இலக்கு வைக்கும் போது, இலக்கு வைக்கப்பட்ட செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

## 1.3 நிறுவனத்தின் நிருவாகம்

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகள், நிறுவனத்தின் நிருவாக சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சபையானது தொழில் பிரிவினது முத்தரப்பைச் சார்ந்த பங்குதாரர்கள் மற்றும் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. அதாவது தொழில் தருனர்கள், ஊழியர்கள் (தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி) மற்றும் உரிய துறைசார் நிபுணர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் சட்டத்தின் ஊடாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தொழில் அமைச்சரால் நிறுவனத்தின் நிருவாக சபை நியமிக்கப்படுகின்றது.

**2016 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் நிருவாக சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. திரு.ஏ.எம்.கோத்தாபாய ஜயரத்ன, தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு – செயலாளர்
2. திருமதி.சாந்தனி அமரதுங்க – தொழில் ஆணையாளர் நாயகம் - உப தலைவர்
3. திரு.சமன் வடுகே – பணிப்பாளர் நாயகம் - தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனம்
4. திருமதி.சீ.எச்.ரணதுங்க – அங்கத்தவர்
5. பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க – அங்கத்தவர்
6. திருமதி.பீ.டீ.எல்.எம்.தர்மசேன - அங்கத்தவர்
7. திருமதி.கே.ஏ.டீ.ஆர்.நிஷாந்தி ஜயசிங்க - அங்கத்தவர்
8. திருமதி.சமந்தி சேனாநாயக்க - அங்கத்தவர்
9. திரு.லெஸ்லி தேவேந்திர - அங்கத்தவர்
10. திரு.ரொஹான் பண்டித கோரலகே - அங்கத்தவர்
11. டப்ளியு.எம்.கே.எல்.வீரசிங்க - அங்கத்தவர்
12. திருமதி. ஏ.எஸ்.இலன்கமகே - அங்கத்தவர்
13. திரு.சீ.பீ.மாயாதுன்னே - அங்கத்தவர்
14. திரு.ஜே.எம்.என்.ஜயசிங்க - அங்கத்தவர்
15. திரு.எம்.ஏ.எம்.ஏ.மொரகொட - அங்கத்தவர்
16. டப்ளியு.என்.எஸ்.விக்கிரமசிங்க - அங்கத்தவர்
17. திரு.தர்ம ஶ்ரீ வீரசிங்க - அங்கத்தவர்
18. திருமதி.பீ.எஸ்.அரம்பவத்தே - அங்கத்தவர்


## 1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு

பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றதிகாரியாக விளங்குவதுடன் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அவர் நியமிக்கப்படுகின்றார். நிருவாக சபையினால் காலத்திற்குக் காலம் கையளிக்கப்படுகின்ற அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பணிப்பாளர் நாயகத்தையே சாரும்.

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனம் ஒன்றிற்கொன்று வேறுபட்ட மூன்று பிரிவுகளின் கீழ் செயற்படுகின்றது, அதாவது;

- ❖ பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- ❖ ஆய்வுகள், திட்டடமிடல் மற்றும் வெளியீடுகள்
- ❖ நிருவாகம் மற்றும் நிதி

**நிறுவனக் கட்டமைப்பு**




பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் கீழ் மூன்று அலகுகள் காணப்படுகின்றன. தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள், மனித வள முகாமைத்துவம் மற்றும் வேலைத் தளத்தில் விளைதிறனை விருத்தி செய்தல் என்பன அம்மூன்று அலகுகளாகும். தற்போது இவ்வலகுகளது செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது இரண்டு உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் பொறுப்புக் கூறுதல் வேண்டும். நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளதும் முன்னேற்றம், மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் கால அட்டவணைக்கேற்ப அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பில் நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக ஆய்வுகள், திட்டமிடல் மற்றும் வெளியீட்டு பிரிவுகள் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

நிருவாக மற்றும் நிதிப் பிரிவுகளின் ஊடாக நிறுவனத்தின் அனைத்து நிருவாக மற்றும் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் நாயகம், உதவிப் பணிப்பாளர் (T&D) மற்றும் கணக்காளரது நேரடி மேற்பார்வையின் கீழ் அவை செயற்படுத்தப்படுகின்றன.

**1.5 நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள்**

தமது தொழிலை விருத்தி செய்து கொள்ளவேண்டிய இலங்கையின் ஊழியப் படைக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு சிறந்த தரம்மிக்க பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் ஊடாக பங்குபற்றுவோரது அறிவு, திறன், மற்றும் மனப்பாங்கினை விரிவடையச் செய்வதற்கு இந்நிறுவனம் பொறுப்புடன் செயற்படுகின்றது. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய, பிரதான மூன்று விடயப்பரப்புகளுக்குரிய செயற்பாடுகள் இந்நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்றன.

1) தொழிற் சட்டம் மற்றும் தொழில் உறவுகள்
2) மனித வள முகாமைத்துவம்
3) வேலைத்தளத்தில் விளைதிறனை விருத்தி செய்தல்.

சமூக உறவுகளது மேம்படுத்தல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்களது உள்ளடக்கங்களை விரிவு படுத்தல் ஊடாக தொழில் தருனர் மற்றும் தொழிலாளர்களது உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் முத்தரப்பு பங்குதாரர்களை வலுப்படுத்துதலுக்குத் தேவையான இலக்கு வைக்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் அடித்தளத்தை இடுவதற்காக தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவு பொறுப்புடன் செயற்படுகின்றது.

ஊழிய முகாமைத்துவத்தில் மிகச் சிறந்த செயற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக தமது ஆற்றலை விருத்தி செய்து கொள்வதன் ஊடாக உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்கும் செயற்பாட்டில் வினைத்திறனை அதிகரிப்பதற்காக தமக்குக் கீழ் உள்ள உத்தியோகத்தர்களது விருப்பினை வளர்த்துக் கொள்ளுதல் ஊடாக சந்தைச் சூழலை மாற்றுவதற்காக நிறுவனத்திலுள்ள ஊழியர்களை முகாமைத்துவம் செய்யும் செயற்பாடுகள் மற்றும் ஒழுக்கத்தினை மேம்படுத்துவதற்காக பாடநெறிகளை நடாத்துதல் என்பன மனிதவள முகாமைத்துவப் பிரிவின் நோக்கமாகும்.

மிகச் சிறந்த விளைதிறன் மிக்க வேலைத்தளமொன்றை உருவாக்குவதற்காக, ஊழியர்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காக, பயிற்சி மற்றும் அபிவிருத்தி பாடநெறிகளை நடாத்துதல், பிரச்சினைகளைத் தடுப்பதற்கான முற்செயற்பாட்டு அணுகுமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் பொருத்தமான சூழலை படிப்படியாக மாற்றுதல், வேலைத்தளத்தின் வினைத்திறன் மற்றும் விருத்தி செய்தல் பிரிவின் நோக்கமாகும்.





தீர்வுகளைக் காணுதல் மற்றும் கொள்கை விதப்புரைகளை ஏற்படுத்துவதற்காக தொழில் பிரிவில் காணப்படுகின்ற மற்றும் எழுகின்ற பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை பரிசோதித்து பகுப்பாய்வு செய்வதற்காக இந்நிறுவனத்தினால் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குப் புறம்பாக, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தினால் அரச, பகுதி அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அவர்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் தொழில்சார் முறையில் பரீட்சைகள் நடாத்தப்படும். ஆய்வு ரீதியான வெளிப்படுத்தல்கள் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஜேர்னல், வார சஞ்சிகைகள், நூல்கள் என்பனவற்றை வெளியிடுதல், முத்தரப்பு பங்காளர்களது அங்கத்தவர்களுக்கு கல்வியை வழங்குவதில் தொடர்புபடுதல் என்பன இந்நிறுவனத்தின் முக்கிய கடமைகளாகும்.

மேலும், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, தொழில் திணைக்களம், ஏனைய அரச நிறுவனங்கள், பகுதி அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பவற்றுடன் ஒத்துழைப்புடன் இந்நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. மேலும், சர்வதேச தொழில் தாபனம், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு அலுவலகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள் போன்ற சர்வதேச அமைப்புக்களது செயலணியுடன் இணைந்து தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனம் செயற்படுகின்றது. அவ்வாறே இந்திய அமைப்பான இந்தியாவின் வீ.வீ.கிரி தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்துடன் கலந்துரையாடல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





## 2.0 பயிற்சி மற்றும் அபிவிருத்தி

டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள், குறுகிய கால பாடநெறிகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவை ஊடாக பரந்தளவான சேவைகள் இந்நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன. மேலும் தமது ஊழியர்களின் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக தொழில் தருனர் சங்கங்களால் விடுக்கப்படுகின்ற விசேட கோரிக்கைக்கமைய தயாரிக்கப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. முகாமைத்துவ அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவர்கள் தொடக்கம் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் வரை அனைத்துத் தரப்பினருக்கும் நிறுவனத்தினால் சேவைகள் வழங்கப்படுகின்றன. தனியார் துறை, தொழிற்சங்க தலைவர்கள், அரச உத்தியோகத்தர்களைப் போன்றே தொழில் கொள்வோர் மற்றும் தொழில் கொடுப்போரது இயலுமையை விருத்தி செய்வதற்கு கல்வி மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும்.





### 2.1 டிப்ளோமாப் பாடநெறிகள்

அதன் அடிப்படை கற்றற் செயற்பாடாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் ஊடாக,

1. தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள்
2. மனித வள முகாமைத்துவம்
3. வேலைத்தளத்தில் உற்பத்தித் திறனுடன் தொடர்புடைய மிக உயர் நிபுணத்துவம் சார் மற்றும் தொழில்சார் மட்டத்திலான மூன்று டிப்ளோமா பாடநெறிகளும் நடாத்தப்படுகின்றுன.

### 2.2 சான்றிதழ் பாடநெறிகள்

வருடாந்தம் நிறுவனத்தின் ஊடாக மூன்று பாடங்களைக் கொண்டு 24 சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. அதாவது, தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள், மனித வள முகாமைத்துவம் மற்றும் டிப்ளோமாப் பாடநெறிகளது கற்றல் அலகுகளில் பங்குபற்றுதல், வேலைத்தளத்தின் வினைத்திறனை விருத்தி செய்தல்.

## 2.3 குறுகிய கால மற்றும் தயாரித்துக் கொள்ளப்பட்ட பாடநெறிகள்

பிரதான விடயப் பரப்புக்களைக் கொண்டதாக நிறுவனத்திளால் ஒரு நாள் தொடக்கம் 03 நாட்கள் வரையான பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. மேலும் தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனத்தின் பயிற்சி நிலையங்களில் அல்லது கோரிக்கை விடுக்கின்ற நிறுவனங்களில் சேவை பெறும் நிறுவனங்களது கோரிக்கைக்கமைய இந்நிறுவனத்தினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.





## 2.4 வசதிகள்

அனைத்து பயிற்சி வசதிகளையும் கொண்ட முழுமையாக குளிரூட்டப்பட்ட கேட்போர் கூடங்கள் மற்றும் விரிவுரை மண்டபங்கள் இந்நிறுவனத்தில் காணப்படுகின்றன.





## 2.5 வளவாளர்கள்

நாட்டில் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய பாடத்திட்டங்களில் உயர் தகைமைகளைப் பெற்ற, மிகச் சிறந்த அனுபவங்களைக் கொண்ட வளவாளர்களைப் பெற்றுக் கொள்வதில் இந்நிறுவனம் வெற்றிகண்டுள்ளது. இவ்வளவாளர் குழாமில் பல்கலைக்கழக மற்றும் வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த சமகால மற்றும் முன்னர் இருந்த கல்விமான்கள், கொள்கை வகுப்பாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள், பகுதி அரச நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் உட்பட அரச நிறுவனங்களைச் சார்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சாலை நிபுணர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்.

## 2.6 2016 ஆம் ஆண்டின் நடப்பு விபரங்கள்

செயற்றிட்டத்திற்கமைய, 29 ஒருநாள் நிகழ்ச்சிகளையும், 18 இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும், 06 மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் நடாத்துவதற்கு தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனம் திட்டமிட்டிருந்தது. எனினும் 42 ஒரு நாள் நிகழ்ச்சிகளையும், 19 இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும், 11 மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் நடாத்தியதன் மூலம் குறித்த இலக்கை விட அதிகளவான நிகழ்ச்சிகளை நடாத்தி வெற்றிகாண முடிந்தது. அவ்வாறே சேவைபெறுநர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக தயாரிக்கப்பட்ட 07 பாடநெறிகளும் 07 அரச பரீட்சைகளும், கோரிக்கை விடுக்கப்பட்ட 06 பாடநெறிகளும் நடாத்தப்பட்டன. அவ்வாறே 03 டிப்ளோமாப் பாடநெறிகளை நடாத்துவதற்கு இலக்கு வைக்கப்பட்டிருந்தாலும் இவ்வருடத்தில் 05 டிப்ளோமாப் பாடநெறிகளை நடாத்தி நிறுவனம் வெற்றி கண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் நிதி இலக்கு ரூ.14.7ஆகக் காணப்பட்டதுடன், அது 95 குறுகிய காலப் பாடநெறிகள் மற்றும் 05 டிப்ளோமாப் பாடநெறிகள் மூலமாக பெறுவதற்கு இலக்கு வைக்கப்பட்டது. எனினும் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனம் 20.3 மில்லியன் ரூபாய்களை உழைத்துக் கொள்ள முடிந்தமைக்கான காரணம் டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள், பரீட்சைகள், செயலமர்வுகள் மற்றும் கருத்திட்டங்கள் உள்ளடங்களாக 100 நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்ததன் வழியாக அத்தகைய வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடிந்தது. அட்டவணை – 1 பௌதீக மற்றும் நிதி மீளாய்வு ஊடாக 2016ஆம் ஆண்டின் முன்னேற்றம் தொடர்பான தரவுகள் தெளிவாகக் காணப்பட்டுள்ளன.


## அட்டவணை 1

## பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் - 2016

| நிகழ்ச்சிகள் | பௌதீக | | நிதி (ரூ.'000) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| ஒருநாள் நிகழ்ச்சிகள் | 29 | 42 | 1,740,000 | 3,453,200 |
| இரண்டு நாள் நிகழ்ச்சிகள் | 18 | 19 | 2,160,000 | 3,039,000 |
| மூன்று நாள் நிகழ்ச்சிகள் | 6 | 11 | 960,000 | 1,932,800 |
| சான்றிதழ் பாடநெறிகள் | 3 | 7 | 1,200,000 | 1,574,000 |
| பரீட்சைகள் | 3 | 7 | 200,000 | 208,360 |
| டிப்ளோமாப் பாடநெறிகள் | 3 | 5 | 3,850,000 | 6,336,250 |
| வெளியார் கோரிக்கைகளின் அடிப்படையிலான பாடநெறிகள் | 6 | 6 | 1,152,000 | 1,875,000 |
| செயலமர்வுகள் | 2 | 2 | 500,000 | 583,525 |
| கருத்திட்டங்கள் | 2 | 1 | 3,000,000 | 1,370,000 |
| **மொத்தம்** | **72** | **100** | **14,762,000** | **20,372,135** |


## வரைபு - 1

### பௌதீக மீளாய்வு 2016 - இலக்கு மற்றும் முன்னேற்றம்



வரைபு - 2

நிதி மீளாய்வு - 2016 – இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ..'000)








## 2.7 தொழிற்சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள்

தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவின் நிதிசார் இலக்கு ரூ.2.8 மில்லயனாகக் காணப்பட்டதுடன் அது குறுகிய கால பயிற்சித் திட்டங்கள் 16, டிப்ளோமாப் பாடநெறி 01 இன் மூலமாக ஈட்டிக் கொள்வதற்கு இலக்கு வைக்கப்பட்டிருந்தது. எனினும் அப்பாடநெறிகளுக்கு அதிக கேள்வி காணப்பட்டதால் 18 குறுகிய காலப் பாடநெறிகள் மற்றும் 1 டிப்ளோமாப் பாடநெறி ஊடாக ரூ.5.2 மில்லியன்களை ஈட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

**அட்டவணை 2**


**பௌதீக மற்றும் நிதி மீளாய்வு - 2016**

**தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவு**

| நிகழ்ச்சித்திட்டங்கள் | பௌதீக | | நிதி (ரூ.'000) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| ஒருநாள் நிகழ்ச்சிகள் | 8 | 3 | 288,000 | 284,000 |
| இரண்டு நாள் நிகழ்ச்சிகள் | 4 | 5 | 288,000 | 885,000 |
| மூன்று நாள் நிகழ்ச்சிகள் | 3 | 5 | 288,000 | 696,000 |
| வெளியார் கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகள் | - | 4 | - | 1,540,000 |
| டிப்ளோமாப் பாடநெறி | 1 | 1 | 1,540,000 | 1,771,000 |
| சான்றிதழ் பாடநெறி | 1 | 1 | 400,000 | 112,000 |


வரைபு - 3

பௌதீக முன்னேற்றம் 2016 - இலக்கு மற்றும் முன்னேற்றம்
தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவு




வரைபு - 4

நிதி மீளாய்வு 2016 - இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ.'000)
தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவு




### 2.8 மனித வள முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவப் பிரிவின் அவ்வருடத்திற்கான இலக்கு ரூ.3.3 மில்லியன் எனத் திட்டமிடப்பட்டிருந்தது. அது 25 குறுகிய காலப் பாடநெறிகள் மற்றும் 1 டிப்ளோமாப் பாடநெறி ஊடாக ஈட்டிக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மனித வள முகாமைத்துவப் பிரிவினால் மிகச் சிறந்த வகையில் முயற்சித்ததன் காரணமாக 1 டிப்ளோமாப் பாடநெறி மற்றும் 32 குறுகிய காலப் பாடநெறி ஊடாக ரூ.6.3 மில்லியன் ரூபாய்களை ஈட்டிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.


**அட்டவணை 3**
**பௌதீக மற்றும் நிதி மீளாய்வு - 2016**
**மனித வள முகாமைத்துவம்**

| நிகழ்ச்சித்திட்டங்கள் | பௌதீக | | நிதி (ரூ.000’) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| ஒருநாள் நிகழ்ச்சிகள் | 11 | 18 | 396,000 | 1,395,000 |
| இரண்டு நாள் நிகழ்ச்சிகள் | 7 | 4 | 504,000 | 480,000 |
| மூன்று நாள் நிகழ்ச்சிகள் | 1 | 3 | 96,000 | 500,800 |
| வெளியார் கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகள் | 3 | 1 | 576,000 | 275,000 |
| டிப்ளோமாப் பாடநெறிகள் | 1 | 2 | 924,000 | 2,618,000 |
| சான்றிதழ் பாடநெறிகள் | 1 | 2 | 400,000 | 464,000 |
| செயலமர்வுகள் | 2 | 2 | 500,000 | 583,525 |

வரைபு: 5
பௌதீக மீளாய்வு 2016 - இலக்கு மற்றும் முன்னேற்றம்
மனித வள முகாமைத்துவம்




வரைபு : 6
நிதி மீளாய்வு 2016 - இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ.'000)
மனித வள முகாமைத்துவம்




## 2.9 வேலைத்தளத்தின் வினைத்திறன்

வேலைத்தளத்தின் விளைதிறனை விருத்தி செய்யும் பிரிவின் நிதிசார் இலக்காக, குறுகிய காலப் பாடநெறிகள் 20 மற்றும் 01 டிப்ளோமாப் பாடநெறியை நடாத்துவதன் ஊடாக ரூ.3.3மில்லியன் ரூபாவை ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இப்பிரிவானது குறுகிய கால பாடநெறிகள் 38 மற்றும் 2 டிப்ளோமாப் பாடநெறிகளை நடாத்தியதன் ஊடாக 6.7 மில்லியன் ரூபாய்களை இவ்வருடத்தில் ஈட்டிக் கொள்ள முடிந்தது.

**அட்டவணை 4**
**பௌதீக மற்றும் நிதி மீளாய்வு – 2016**
**வேலைத்தளத்தின் வினைத்தறன்**


| நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக | | நிதி (ரூ.000') | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம் | 10 | 21 | 360,000 | 1,774,000 |
| இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 7 | 10 | 504,000 | 1,674,000 |
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2 | 3 | 192,000 | 736,000 |
| விசேட திட்டம் | 1 | 4 | 400,000 | 841,000 |
| டிப்ளோமாப் பாடநெறி | 1 | 2 | 924,000 | 1,735,000 |

**வரைபு - 7**
**பௌதீக மீளாய்வு 2016 - இலக்கு மற்றும் முன்னேற்றம்**
**வேலைத்தளத்தின் வினைத்திறன்**



வரைப் - 8

நிதி மீளாய்வு 2016 - இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ.'000)
வேலைத்தளத்தின் வினைத்திறன்



## 3.0 நிதிக் கூற்று

### 3.1 2016 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

**NATIONAL INSTITUTE OF LABOUR STUDIES**
**STATEMENT OF FINANCIAL POSITION**
**AS AT 31 DECEMBER 2016**

| | Note | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| **Assets** | | | |
| **Non Current Assets** | | | |
| Plant and Equipment | 14 | 10,326,283.91 | 10,527,368.32 |
| **Current Assets** | | | |
| Inventories | 15 | 428,843.79 | 163,465.37 |
| Receivables | 16 | 8,582,078.96 | 4,045,760.95 |
| Ministry Account | 17 | - | 89,500.00 |
| Received in advance | 18 | (531,243.75) | (9,000.00) |
| Cash Advances | 19 | 121,966.00 | |
| Fixed Deposit (BOC) | | 10,393,205.48 | |
| Cash & Cash Equivalent | 20 | 16,179,257.21 | 25,450,748.94 |
| **Total Assets** | | **45,500,391.60** | **40,267,843.58** |
| **Liabilities** | | | |
| **Current Liabilities** | | | |
| Accrued Expenses | 21 | 1,482,319.64 | 218,559.14 |
| **Total Net Assets** | | **44,018,071.96** | **40,049,284.44** |
| **Net Assets/ Equity** | | | |
| Accumulated Fund | | | |
| Balance B/F as at 01.01.2016 | | 40,049,284.44 | 33,251,180.41 |
| Adjustments in respect of the previous yea | 22 | (1,524,600.00) | (83,390.01) |
| Adjusted Balance as at 01.01.2016 | | 38,524,684.44 | 33,167,790.40 |
| Capital Reimbursment | 23 | 2,481,015.30 | 1,696,391.10 |
| Adjustment for the Period | 24 | 2,683,186.61 | 3,951,444.56 |
| Excess/(Deficit) for the Year | | 329,185.61 | 1,233,658.38 |
| | | **44,018,071.96** | **40,049,284.44** |

The accounting policies on pages 07 to 09 and notes on pages 10 to 29 from an integral part of this financial statement. The Board of Directors are responsible for the prepration and presentation of these Financial Statements in accordance with the Sri lanka Public Sector Acounting Standards (SLPSAs). These Financial Statements were approved by the Board of Directors and signed on their behalf.

Lankika Weerasinghe
Accountant

**Lankika Weerasinghe**
**Accountant**
National Institute of Labour Studies
No. 267, Pannipitiya Road,
Pelawatta, Battaramulla

Saman D. Waduge
Director General

Saman D. Waduge
Director General
National Institute of Labour Studies
267, Pannipitiya Road,
Pelawatta, Battaramulla

Samanthi Senanayake
Board Member

**Samanthi Senanayake**
Senior Assistant Secretary (Information Technology)
Ministry of Public Administration & Management
Independence Square - Colombo 07.

S M Gotabaya Jayarathna
Chairman

S.M. Gotabaya Jayarathne
Secretary
Ministry of Labour and Trade Union Relations
2nd Floor, Labour Secretariat,
Colombo 05.

Final Accounts 2016
National Institute of Labour Studies

**3.2 2016 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாடு தொடர்பான கூற்று**

| | குறிப்பு | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|---|
| **<u>வழிநடத்தல் வருமானம்</u>** | | | |
| மீண்டெழுபவற்றை மீளச் செலுத்துதல் | 4 | 8,839,191.20 | 11,555,041.38 |
| வருமானம் | 5 | 23,025,998.92 | 11,161,090.00 |
| **முழு வருமானம்** | | **31,865,190.12** | **22,716,131.38** |
| **<u>வழிநடத்தல் செலவு</u>** | | | |
| ஆளனி சம்பளம் | 6 | 10,581,829.58 | 7,412,495.76 |
| போக்குவரத்து | 7 | 826,368.20 | 54,940.07 |
| பயன்படுத்தப்பட்ட வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 8 | 944,440.22 | 443,674.15 |
| பராமரிப்பு | 9 | 1,189,802.87 | 1,049,525.33 |
| ஒப்பந்தச் சேவைகள் | 10 | 7,886,033.50 | 7,338,750.62 |
| தேய்மானம் / கடன் தீர்ப்பு | 11 | 1,477,524.03 | 1,493,258.48 |
| ஏனைய வழிநடத்தற் செலவுகள் | 12 | 1,027,122.96 | 495,264.20 |
| நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் | 13 | 7,602,883.15 | 3,194,564.40 |
| முழு வழிநடத்தற் செலவுகள் | | **31,536,004.51** | **21,482,473.01** |
| **வழிநடத்தற் செயற்பாடுகளின் மிகை / குறை** | | **329,185.61** | **1,233,658.37** |
| **<u>நிதிச் செலவுகள்</u>** | | | |
| வங்கிக் கட்டணங்கள் | | - | - |
| **வழிநடத்தற் செயற்பாடுகளின் அண்ணளவான மிகை / குறை** | | **329,185.61** | **1,233,658.37** |

**3.3 2016 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப்பாச்சல் கூற்று**

| | குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) |
|---|---|---|---|
| **<u>வழிநடத்தற் செயற்பாடுகளின் நிதி ஓட்டம்</u>** | | | |
| வழிநடத்தற் செயற்பாடுகளின் மிகை / குறை | | 329,185.61 | 1,233,658.38 |
| **இணக்கம்:** | | | |
| சம்பளம், அமைச்சு மற்றும் திணைக்களம் | 24 | 2,683,186.61 | 3,951,444.56 |
| தேய்வைக் கணக்கிடுதல் | 11 | 1,477,524.03 | 1,493,258.47 |
| வழிநடத்தற் செயற்பாடுகள் | 25 | (524,600.00) | - |
| தொடர்ச்சியான மூலதன கட்டணங்களுக்கு முன்னர் வழிநடத்தற் பயன்கள் | | **3,965,296.25** | **6,678,361.41** |
| இருப்பு அதிகரிப்பு / குறைவு | 15 | (265,378.42) | (163,465.37) |
| பெறுவனவுகளின் அதிகரிப்பு / குறைவு | 16 | (4,536,318.01) | 1,697,693.67 |
| அமைச்சு கணக்கில் அதிகரிப்பு / குறைவு | | 89,500.00 | |
| முற்பணங்களில் அதிகரிப்பு / குறைவு | | (121,966.00) | |
| நிலையான வைப்புக்களின் அதிகரிப்பு / குறைவு | | (10,393,205.48) | |
| குவிப்பில் அதிகரிப்பு / குறைவு | 21 | 1,263,760.50 | (72,667.49) |
| முற்பணங்களில் கிடைத்த வருமானங்களின் அதிகரிப்பு / குறைவு | 18 | 522,243.75 | 9,000.00 |
| **<u>வழிநடத்தல்கள் மூலம் ஈட்டப்பட்ட நிதி</u>** | | **(9,476,067.41)** | **8,148,922.22** |
| நிதிச் செலவுகள் | | - | - |
| வழிநடத்தற் செயற்பாடுகளின் அண்ணளவான நிதிப்பாச்சல் | | **(9,476,067.41)** | **8,148,922.22** |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளின் நிதிப்பாச்சல்</u>** | | | |
| பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல் | 14.1 | (2,276,439.62) | (1,840,144.06) |
| முதலீட்டு மீளச் செலுத்தல்கள் | 23 | 2,481,015.30 | 1,696,391.10 |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளின் அண்ணளவான நிதியோட்டம்</u>** | | **204,575.68** | **(143,752.96)** |
| நிதி மற்றும் அதற்குச் சமமானவைகளின் அண்ணளவான அதிகரிப்பு / குறைவு | | (9,271,491.73) | 8,005,169.27 |
| வருடத் தொடக்கத்தில் நிதி மற்றும் அதற்குச் சமமானவைகள் | 20 | 25,450,748.94 | 17,445,579.67 |
| வருட இறுதியில் நிதி மற்றும் அதற்குச் சமமானவைகள் | 20 | **16,179,257.21** | **25,450,748.94** |

**3.4 பகுதிகளது வேறுபாடுகள் தொடர்பான கூற்று – 2016 டிசம்பர் 31ஆந் திகதியில்**

| | **2016 (ரூ.)** |
|---|---|
| **2016.01.01 ஆந் திகதியில் மு/கொ மொத்த நிதி மீதி** | **40,049,284.44** |
| கடந்த வருடம் தொடர்பிலான இணக்கம் | (1,524,600.00) |
| **2016.01.01 ஆந் திகதியில் இணக்கம் செய்யப்பட்ட மீதி** | **38,524,684.44** |
| மூலதன மீளச் செலுத்தல்கள் | 2,481,015.30 |
| கால எல்லைக்கான இணக்கம் | 2,683,186.61 |
| வருடத்திற்கான மிகை / குறை | 329,185.61 |
| **2016.12.31 ஆந் திகதியில் மீதி** | **44,018,071.96** |

## 3.5 2016 டிசம்பர் மாதத்தில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றிற்கான குறிப்பு

### 1. நிறுவனத்தின் தகவல்கள்

### 1.1 பொதுவானவை

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனமானது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் உள்ள ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப பிரிவினை மறுசீரமைத்து தொழில் விடயப் பரப்பிற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இந்நிறுவனம் தாபிக்கப்பட்டது. பராளுமன்றத்தினால் 2012ஆம் ஆண்டு 12ஆம் இலக்க சட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் ஊடாக அது சட்டரீதியாகத் தாபிக்கப்பட்டது. கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் தொழில் தருனர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஊழியர்கள் உட்பட தொழிற்றுறையில் முத்தரப்பு பங்களார் பிரதிநிதிகளைக் கொண்டமைந்த ஆளுகைச் சபையினால் இந்நிறுவனம் நிருவகிக்கப்படுகின்றது. இந்நிறுவனம் இலக்கம், 267, பன்னிபிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 அடிப்படைச் செயற்பாடுகள் மற்றும் வழிநடத்தல் இயல்புகள்

நிறுவனத்தின் அடிப்படைச் செயற்பாடென்பது, பயிற்சித் திட்டங்கள், தொழில் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள், வேலைத்தளத்தின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல், வெளியீடுகளை மேற்கொள்ளுதல் என்பனவாகும்.

### 1.3 நிறுவனத்தின் ஆளனியினர்

2007 செப்டெம்பர் தொடக்கம் நிறுவனத்தினால் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டாலும், தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் ஆளனி எண்ணிக்கைக்கான அனுமதியானது, 2014ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே பெறப்பட்டது. அத்தகையதொரு நிலைமையின் கீழ், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் மற்றும் தொழில் திணைக்களத்தினால் நிறுவனத்திற்கு ஆளினியினர் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களது சம்பளம் உரிய அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. அதனால் இந்நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளனி வேதனாதிகள் மற்றும் படிகள் தேசிய தொழிற்சங்க நிறுவனத்தைப் போன்றே தொழில் மற்றும் தொழிற்சங்க அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்படுகின்றன.

### 1.4 தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம்

நிறுவனத் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 2011 செப்டெம்பர் 30ஆந் திகதி வரை நிறுவனத்தின் நிதி முகாமைத்துவமானது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. (ஆளனியினர் மற்றும் வேறு தடைகள் காரணமாக)

## 2. ஆயத்தப்படுத்தும் அடிப்படைகள்

### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கைகள், நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்றுக்கள், நிதி ஓட்ட அறிக்கை, பங்குகளது வேறுபாட்டு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களைக் கொண்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர்களது நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை அரச துறையின் கணக்கியல் நியமங்களுக்கமைய இக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீடுகளின் அடிப்படைகள்

நிதிக் கூற்றுக்கள் உண்மை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களது பணவீக்க விடயங்களின் பொருட்டு இணக்கம் செய்யப்படவில்லை.

### 2.3 நிகழ்காலக் கவனம்

இதனைக் கொண்டு செல்வதற்குள்ள இயலுமை, தாபிக்கும் மதிப்பீடு என்பன பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களால் கலைத்து விடுவதற்கு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு கவனம் செலுத்தப்படவில்லை.

### 2.4 ஒப்பீட்டளவிலான தகவல்கள்

நிறுவனத்தினால் கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்துள்ளதுடன், அதனால் கடந்த வருடத்தில் பயன்படுத்தியவையுடன் அவை இணங்கவில்லை. நடப்பு வருடத்தில் சமர்ப்பித்தலை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சந்தர்ப்பத்தில் கடந்த வருடத்தின் தரவுகள் மற்றும் தகவல்கள், கூற்றுக்கள் என்பன மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.5 செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தலின் பண அலகுகள்

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பண அலகான இலங்கை ரூபாக்களில் இந்த நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 3. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள், இந்நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் இக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதியிலும் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### 3.1 சொத்துக்கள், பொறிமுறைகள், உபகரணங்கள்

சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரண செலவு என்பது சொத்துக்கள் அதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டிற்கு அதன் வேலைசெய்யும் நிலைமைக்கு கொண்டு வரும்போது ஏற்பட்ட சிற்சில செலவுகளுடன் வருகின்ற கொள்வனவு செய்யும் அல்லது நிருமாணிக்கும் செலவாகும். செலவின் போது ஒரு சொத்தாக முதலில் அறிந்து கொண்டதன் பின்னர், மீண்டும் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அதன் மூலம் ஏற்படுகின்ற ஏதேனும் தேய்வினை கழித்ததன்

பின்னர் மீண்டும் மதிப்பிடப்பட்ட தொகை கொண்டு செல்லப்படும். ஏனைய அனைத்துச் சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களது தேறிய தேய்வு கழிக்கப்பட்டு செலவுகள் குறிப்பிட்டுக் காட்டப்படும். வெவ்வேறு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடிய ஆயட்காலத்தைக் கொண்ட பிரதான உதிரிப் பாகங்களில் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பத்தில், அச்சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் என்பன பிறிதான விடயமாகக் கணக்கிடப்படும். அனைத்து நிதியாண்டின் இறுதியிலும் தேவையான விதத்தில் சொத்துக்களது எஞ்சிய மதிப்பு, பயன்பாட்டுக் காலம் மற்றும் தேய்வு கணக்கிடும் முறையை விசாரித்து தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்திற்கு மேலதிகமாக செலவினை வெட்டி விடுவதற்காக உறுதியுடைய காணிகளை விட அனைத்து சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் மீது தேய்வு அறவிடப்படும். வெளியே அனுப்பக் கூடிய திகதி வரை பயன்பாட்டிற்கான சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திகதிகள், தேய்வுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சொத்து பொறிமுறை மற்றும் உபகரணங்களது விபரிக்கப்பட்டுள்ள விதத்தில் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் செலவு முறையில் கணக்கிடப்பட்டுள்ளது என கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் இலகுவான இணைந்த முறையின் மீது பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களது தேய்வு கணக்கிடப்படுகின்றது.

**பயன்படுத்தப்பட்ட அடிப்படை வருடாந்த சதவீதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| | **2016** |
|---|---|
| பொறிமுறைகளும் உபகரணங்களும் | **10** வருடங்கள் |
| மரத் தளபாடங்கள் மற்றும் அதன் உபகரணங்கள் | **13(7.5%)** வருடங்கள் |
| கணனி | **10** வருடங்கள் |
| வாகனங்கள் | **10** வருடங்கள் |
| பெயர்ப்பலகைகள் மற்றும் வேறு | **3** வருடங்கள் |
| புத்தகங்கள் | **5** வருடங்கள் |

மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2013.10.02ஆந் திகதியில் சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் என்பன மீள மதிப்பீடு செய்யப்பட்டு 2004.01.07ஆந் திகதி உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டிற்கான தேய்வுகளை கணக்கிடுதல் 2014.01.01ஆந் திகதி மீள் மதிப்பீட்டை கணக்கிடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருடத்தில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யும் செலவின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. தேய்வின் சதவீதத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுவதாக சமிக்ஞை தென்படின், சொத்துக்களது எஞ்சிய பெறுமதியின் பயன்பாட்டு ஆயுட் காலம், அச்சொத்துக்கள் தேய்வடையும் புதிய எதிர்பார்ப்புக்களை பிரதிபலிப்பதற்காக மறுசீரமைக்கப்படுகின்றது. முதலில் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாட்டு நியமங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால பொருளாதார நன்மைகளை பேணிச் செல்லுதல் அல்லது மீளவும் பெற்றுக் கொள்வதற்கு சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும்

உபகரணங்களைப் பேணிச் செல்லுதல், முன்னர் பராமரித்துச் செல்லுதல் தொடர்பாக ஏற்பட்ட செலவுகள், மேற்கொள்ளப்பட்ட செலவாக அடையாளங் காணப்படும்.

## 3.2 இருப்பு

நிதியாண்டில் பயன்படுத்தப்பட்ட இருப்புக்களது செலவின் போது வருமானம் மற்றும் செலவு கூற்றுக்களுக்காக அறவிடப்பட்டிருந்தது.

## 3.3 பணம் மற்றும் சமமான பெறுமதிகள்

பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகள் என்பன கையிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் வைப்பிடப்பட்ட பணம் என்பனவற்றை உள்ளடக்கும்.

## 3.4 பொறுப்புக்களும் ஒதுக்குகளும்

கடந்தகால சம்பவங்களது விளைவாக நடப்பு வருடத்தில் பொறுப்புக்கள் காணப்பட்டால் ஐந்தொகையில் பொறுப்புக்கள் அறிந்து கொள்ளப்படும். பொருளாதார நன்மைகளைக் கருத்திற் கொண்டு வளங்கள் வெளியே செல்லுவது அதனைத் தீர்க்கும் சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. **கடன்கொடுத்தோரது கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பொறுப்புக்கள் ஐந்தொகையின் தற்போதைய பொறுப்புக்களாக கருத்திற் கொள்ளப்படும்**. கடந்த காலங்களது சம்பவங்களது விளைவாக நம்பகத் தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நடப்பு சட்டரீதியான அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்திற்குக் காணப்பட்டால் ஒதுக்குகள் இனங்காணப்படுவதுடன் பொறுப்புக்களைத் தீர்த்துக் கொள்வதற்காக பொருளாதார நன்மைகள் வெளியே வழிந்தோடுதல் அவசியம் என்பதை எண்ணிக் கொள்ளலாம்.

## 3.5 வருமானங்களை அடையாளங் காணுதல்

பொருட்கள் வழங்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பொருட்கள் / சேவைகளது விற்பனையின் போது வருமானம் அடையாளங் காணப்படும். கவனத்திற் கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் பெறக்கூடிய நியாயமான பெறுமதி, இலங்கை அரசாங்கத்திற்காக சேகரிக்கப்பட்ட வரியுடன் தொடர்புடைய கழிப்பனவுகள் மற்றும் விற்பனைகள் அண்ணளவான மதிப்பீட்டில் வருமானம் காட்டப்படுகின்றது.

### 3.5.1 வருமான அடிப்படை

பங்குபற்றுபவர்கள் கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது குவிப்பு அடிப்படையில் வருமானம் கணக்கிடப்படும். தவிர்க்க முடியாத காரணங்களினால் சில பங்குபற்றுபவர்களால் நிறைவு செய்யப்படுவதற்கு முன்னர் பாடநெறிகள் விட்டுச் செல்லப்படுவதுடன் பல்வேறு காரணங்களினால் சில பாடநெறிக் கட்டணங்களை அறவிட முடியாதுள்ளது. இப்பெறுவனவுகள் வருமானமாக கவனத்திற் கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், இயலுமெனின் மீதித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பாடநெறியின் ஒட்டுமொத்த வருமானமானது பாடநெறியின் வருடத்திற்கே தீர்மானிக்கப்படுகின்றது.

## 3.6 பெறுவனவுகள்

தீமையான மற்றும் சந்தேகத்திற்குரிய பெறுவனவிற்கான அண்ணளவான படிகளை விளங்கிக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்டுள்ளது என விற்பனைப் பெறுமதிக அளவுகளில் குறிக்கப்பட்டுள்ளது. உரிய தரப்பினரது வேறு பெறுவனவுகள் மற்றும் அறவிடல்கள் தீமையான மற்றும் சந்தேகத்திற்கிடமான பெறுவனவுகளுக்கான படிகள் செலவிலிருந்து கழிக்கப்படும்.

## 3.7 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்பு தொகை திட்டம்

வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்பு தொகை திட்டம் என்பது பிறிதொரு பகுதிக்கு நிலையான பங்களிப்புத் தொகை செலுத்தும் பகுதியின் கீழ் உள்ள தொழிலுக்குப் பின்னரான பயன் திட்டமென்பதுடன் அதிகளவான தொகையை கொடுப்பனவு செய்வதற்காக சட்டரீதியான அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக்கள் இல்லை. அனைத்து ஊழியர்களும் உள்ளடக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்வதற்கான பொறுப்புக்கள் மீது ஏற்பட்ட நட்டம் அல்லது இலாபம் செலவாக அடையாளங் காணப்படும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என ஊழியர்களது அண்ணளவான வேதனாதிகளில் 12% மற்றும் 3% நிறுவனம் பங்களிப்புத் தொகையை செலுத்தும்.

## 3.8 நிதிப்பாச்சல் கூற்று

மறைமுக முறையைப் பயன்படுத்தி நிதிப்பாச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று குறிப்பு**

| குறிப்பு : 4 | 2016 | 2015 |
|---|---|---|
| **மீண்டெழும் செலவுகளை மீளச் செலுத்துதல்** | ரூ. | ரூ. |
| மீண்டெழும் செலவுகளை மீளச் செலுத்துதல் | 8,839,191.20 | 11,555,041.38 |
| **மொத்தம்** | **8,839,191.20** | **11,555,041.38** |

| குறிப்பு : 5 | 2016 | 2015 |
|---|---|---|
| வருமானம் | ரூ. | ரூ. |
| டிப்ளோமாப் பாடநெறி | 6,236,250.00 | 2,899,500.00 |
| சான்றிதழ் பாடநெறி | 1,574,000.00 | 90,000.00 |
| ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,453,200.00 | 1,653,900.00 |
| இரண்டு நாள் நிகழச்சித்திட்டங்கள் | 3,039,000.00 | 2,286,400.00 |
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,932,800.00 | 1,389,200.00 |
| விசேட நிகழச்சித்திட்டங்கள் | 1,875,000.00 | 1,452,400.00 |
| பரீட்சை வருமானம் | 208,360.00 | 287,690.00 |
| ILO கருத்திட்டம் | 1,901,243.75 | 1,100,000.00 |
| செயலமர்வுகள் | 583,525.00 | |
| வேறு வருமானங்கள் | 2,222,620.17 | 2,000.00 |
| **மொத்தம்** | **23,025,998.92** | **11,161,090.00** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு**

| குறிப்பு : 6 | 2016 | 2015 |
|---|---|---|
| **ஆளனி வேதனாதிகள்** | ரூ. | ரூ. |
| ஆளனியினருக்கான சம்பளம் | 1,962,686.46 | 559,480.27 |
| அமைச்சு ஆளனியினருக்கான சம்பளம் | 1,802,896.47 | 2,310,339.00 |
| திணைக்கள ஆளனியினருக்கான சம்பளம் | 880,290.14 | 1,641,105.56 |
| இணைப்பு சம்பளம் | 2,530,275.74 | 527,010.00 |
| இணைப்பு படிகள் | 460,584.86 | 346,327.62 |
| ஓய்வூதிய பங்களிப்பு நிதி | 355,404.50 | 64,087.50 |
| முகாமைத்துவச் செலவுகள் | 450,000.00 | 300,000.00 |
| பதிற்கடமை படிகள் | 116,014.36 | 395,037.58 |
| சம்பளம் | 717,475.00 | 786,495.00 |
| பணிப்பாளர் நாயகத்தின் எரிபொருள் | - | 128,700.00 |
| EPF பங்களிப்பு நிதி | 427,183.08 | 98,916.91 |
| ETF பங்களிப்பு நிதி | 63,277.44 | 14,823.14 |
| விடுமுறை நாள் சம்பளம் | 119,235.90 | 80,172.25 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 178,145.14 | 6,395.93 |
| வேறு படிகள் | 29,282.81 | - |
| ஆளுகை சபை செலவுகள் | 320,689.68 | 100,325.00 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செலவுகள் | 115,108.00 | - |
| பொதுவான கணக்காய்வுக் கட்டணம் | 53,280.00 | 53,280.00 |
| **மொத்தம்** | **10,581,829.58** | **7,412,495.76** |

| குறிப்பு : 7 | 2016 | 2015 |
|---|---|---|
| **போக்குவரத்துச் செலவுகள்** | ரூ. | ரூ. |
| உள்நாடு | 38,609.30 | 54,940.07 |
| வெளிநாடு | 787,758.90 | - |
| மொத்தம் | **826,368.20** | **54,940.07** |

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்
2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு

| குறிப்பு : 8 | 2016 | 2015 |
|---|---|---|
| **வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்** | ரூ. | ரூ. |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 798,748.22 | 334,564.35 |
| பத்திரிகை | 22,070.00 | 16,730.00 |
| எரிபொருள் | 123,622.00 | 92,379.80 |
| **மொத்தம்** | **944,440.22** | **443,674.15** |

| குறிப்பு : 9 | 2016 | 2015 |
|---|---|---|
| **பராமரிப்பு** | ரூ. | ரூ. |
| காற்றுச்சீராக்கி இயந்திர திருத்தம் | 84,836.41 | 76,750.00 |
| கணனி பராமரிப்பு | 33,130.50 | 42,120.00 |
| அலுவலகப் பராமரிப்பு | 806,207.48 | 499,395.38 |
| வாகனப் பராமரிப்பு | 265,628.48 | 431,259.95 |
| **மொத்தம்** | **1,189,802.87** | **1,049,525.33** |

| குறிப்பு : 10 | 2016 | 2015 |
|---|---|---|
| **ஒப்பந்தச் சேவைகள்** | ரூ. | ரூ. |
| கட்டிட குத்தகை | 4,200,000.00 | 4,200,000.00 |
| தொலைபேசி | 331,566.79 | 241,845.91 |
| சுத்திகரிப்புச் செலவுகள் | 1,393,366.12 | 1,395,058.44 |
| மின்சாரம் | 764,407.38 | 640,689.19 |
| நீர் | 72,662.92 | 95,394.99 |
| தபால் கட்டணம் | 242,100.00 | 160,000.00 |
| சேவை ஒப்பந்தங்கள் | 274,986.92 | 100,730.00 |
| பாதுகாப்பு கட்டணங்கள் | 566,614.60 | 505,032.09 |
| நிறுத்தி வைக்கப்பட்ட வரி | 40,328.77 | |
| **மொத்தம்** | **7,886,033.50** | **7,338,750.62** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு**

| குறிப்பு : 11 | 2016 | 2015 |
|---|---|---|
| **தேய்வு** | ரூ. | ரூ. |
| இயந்திரங்களும் பொறிமுறைகளும் | 525,156.38 | 430,992.73 |
| மரத்தளபாடங்களும் உபகரணங்களும் | 340,612.29 | 292,059.08 |
| கணனி | 355,600.00 | 292,880.00 |
| வாகனங்கள் | - | 125,000.00 |
| பெயர்ப்பலகைகள் மற்றும் வேறு | 240,810.00 | 347,326.67 |
| புத்தகங்கள் | 15,345.36 | 5,000.00 |
| **மொத்தம்** | **1,477,524.03** | **1,493,258.48** |

| குறிப்பு : 12 | 2016 | 2015 |
|---|---|---|
| **வேறு வழிநடத்தற் செலவுகள்** | ரூ. | ரூ. |
| விற்பனை அறிவித்தல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | 904,630.96 | 375,424.20 |
| அலுவலக நலனோம்பல் | 119,492.00 | 119,840.00 |
| போக்குவரத்து செலவுகள் | 3,000.00 | - |
| **மொத்தம்** | **1,027,122.96** | **495,264.20** |

| குறிப்பு: 13 | 2016 | 2015 |
|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள்** | ரூ. | ரூ. |
| விரிவுரைக் கட்டணங்கள் | 2,287,076.40 | 1,092,000.00 |
| உணவு பானங்கள் | 2,080,765.25 | 944,855.00 |
| பரீட்சை செலவுகள் | 485,350.00 | 271,743.00 |
| பயிற்சியும் அபிவிருத்தியும் | 1,019,956.05 | 7,500.00 |
| பரிசளிப்பு விழா | 327,145.45 | 205,266.40 |
| கருத்திட்ட செலவுகள் | 1,402,590.00 | 673,200.00 |
| **மொத்தம்** | **7,602,883.15** | **3,194,564.40** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு**

| குறிப்பு : 14 | 2016 | 2015 |
|---|---|---|
| **பொறிமுறைகளும் உபகரணங்களும்** (14.1) | ரூ. | ரூ. |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 3,988,624.82 | 3,572,144.61 |
| மரத்தளபாடங்களும் அதன் பாகங்களும் | 3,659,411.60 | 3,352,647.65 |
| குணனி | 2,614,640.00 | 2,343,040.00 |
| வாகனங்கள் | - | 1,000,000.00 |
| பெயர்ப்பலகைகள் மற்றும் வேறு | 17,226.06 | 249,536.06 |
| புத்தகங்கள் | 46,381.43 | 10,000.00 |
| **மொத்தம்** | **10,326,283.91** | **10,527,368.32** |

| குறிப்பு : 15 | 2016 | 2015 |
|---|---|---|
| **இருப்பு மதிப்பீடு** (15.1) | ரூ. | ரூ. |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 230,322.35 | 136,611.30 |
| அலுவலக உபகரண பராமரிப்பு | 198,521.44 | 26,854.07 |
| **மொத்தம்** | **428,843.79** | **163,465.37** |

| குறிப்பு : 16 | 2016 | 2015 |
|---|---|---|
| **பெறக்கூடிய வருமானம்** (16.1) | ரூ. | ரூ. |
| ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 502,000.00 | 132,000.00 |
| இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 318,000.00 | 444,000.00 |
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 564,800.00 | 152,000.00 |
| விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | | 786,000.00 |
| டிப்ளோமா வருமானம் | 2,970,750.00 | 311,000.00 |
| சான்றிதழ் பாடநெறி | 486,000.00 | - |
| ILO கருத்திட்டம் | | 1,050,000.00 |
| சேவைத்தள நிகழ்ச்சித்திட்டங்கள் | 329,000.00 | |
| செயலமர்வுகள் | 76,500.00 | |
| பரீட்சைகள் | 43,900.00 | - |
| மீண்டெழும் திருப்பிச் செலுத்தல்கள் | 549,223.16 | 396,919.85 |
| மூலதன மீளச்செலுத்தல்கள் | 941,603.30 | 773,841.10 |
| வெளிநாட்டுப் பயிற்சி - இந்தியா | 1,785,482.50 | |
| கொதிகலன் செலவு STC | 14,820.00 | |
| **மொத்தம்** | **8,582,078.96** | **4,045,760.95** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு**

| குறிப்பு : 17 | 2016 | 2015 |
|---|---|---|
| அமைச்சு கணக்கு | ரூ. | ரூ. |
| அமைச்சு கணக்கு (17.1) | - | 89,500.00 |
| **மொத்தம்** | **-** | **89,500.00** |

| குறிப்பு : 18 | 2016 | 2015 |
|---|---|---|
| முற்பணம் பெறுதல | ரூ. | ரூ. |
| ஒருநாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | | 3,000.00 |
| இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | | 6,000.00 |
| UN Women கருத்திட்டம் | 531,243.75 | |
| **மொத்தம்** | **531,243.75** | **9,000.00** |

| குறிப்பு : 19 | 2016 | 2015 |
|---|---|---|
| முற்பணம் | ரூ. | ரூ. |
| ஊழியர் கடன்கள் | 57,166.00 | |
| முற்பணம் - டிப்ளோமா உடை | 64,800.00 | |
| **மொத்தம்** | **121,966.00** | **-** |

| குறிப்பு: 20 | 2016 | 2015 |
|---|---|---|
| பணம் மற்றும் அதற்குச் சமமான | ரூ. | ரூ. |
| இலங்கை வங்கி, நுகேகொடை, A/C 0071451995 | 16,179,257.21 | 25,450,748.94 |
| **மொத்தம்** | **16,179,257.21** | **25,450,748.94** |

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்
2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு

| குறிப்பு : 21 | 2016 | 2015 |
|---|---|---|
| **தேறிய செலவுகள்(21.1)** | ரூ. | ரூ. |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 4,750.83 | 372.90 |
| பதிற்கடைமை கட்டணம் | 52,272.86 | - |
| உள்நாட்டுப் பயணங்கள் | | 2,100.00 |
| பத்திரிகை | 460.00 | - |
| பாதுகாப்பு கட்டணம் | 83,562.17 | 42,061.86 |
| நீர் | 3,119.73 | 15,413.43 |
| துப்புரவுச் செலவு | 133,995.61 | 124,072.15 |
| தொலைபேசி | 34,348.31 | 22,163.80 |
| ஆளனி சம்பளம் | 8,712.00 | - |
| சம்பளம் | 8,000.00 | 12,375.00 |
| ETF | 512.13 | - |
| EPF | 76.82 | - |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | 5,936.29 | - |
| வேறு கொடுப்பனவுகள் | 2,965.89 | |
| ஓய்வூதியம் | 2,202.00 | |
| பரிசளிப்பு விழா | 21,000.00 | |
| பொதுவான கணக்காய்வுச் செலவுகள் | 218,880.00 | |
| பரீட்சைகள் | 101,525.00 | |
| Monitoring & Evaluation – SLAVA டிப்ளோமா | 800,000.00 | |
| **மொத்தம்** | **1,482,319.64** | **218,559.14** |

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்
2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு

| குறிப்பு : 22 | 2016 | 2015 |
|---|---|---|
| **கடந்த வருடம் தொடர்பாக மீள்மதிபீடு செய்தல் இணக்கம் செய்தல்.** | ரூ. | ரூ. |
| மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | | 5,161.29 |
| தேய்வுக்கான ஒதுக்குகள்: மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | | (1,161.30) |
| தேய்வுக்கான ஒதுக்குகள்: பெயர்ப்பலகைகள் மற்றும் வேறு | | (87,390.00) |
| கணக்காய்வுக் கட்டணம் | (165,600.00) | |
| குறுகிய கால நிகழ்ச்சித்திட்டங்கள் | (153,000.00) | |
| மோட்டார் வாகனம் | (1,250,000.00) | |
| தேய்வுக்கான ஒதுக்குகள்: மோட்டார் வாகனம் | 250,000.00 | |
| கருத்திட்ட செலவுகள் -ILO | (150,000.00) | |
| அமைச்சு கணக்கு | (56,000.00) | |
| **மொத்தம்** | **(1,524,600.00)** | **(83,390.01)** |

| குறிப்பு : 23 | 2016 | 2015 |
|---|---|---|
| **மூலதன மீளச் செலுத்தல்கள்** | ரூ. | ரூ. |
| மூலதன மீளச் செலுத்தல்கள் (23.1) | 2,481,015.30 | 1,696,391.10 |
| **மொத்தம்** | **2,481,015.30** | **1,696,391.10** |

| குறிப்பு : 24 | 2016 | 2015 |
|---|---|---|
| **நடப்பு ஆண்டிற்கான இணக்கம் 2016** | ரூ. | ரூ. |
| அமைச்சு ஆளணியினருக்கான சம்பளங்கள் (24.1) | 1,802,896.47 | 2,310,339.00 |
| திணைக்கள ஆளணியினருக்கான சம்பளங்கள் (24.1) | 880,290.14 | 1,641,105.56 |
| **மொத்தம்** | **2,683,186.61** | **3,951,444.56** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2016.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு**

| **குறிப்பு : 25** | **2016** | **2015** |
|---|---|---|
| **வழிநடத்தற் செயற்பாடுகளுக்கான இணக்கம்** | ரூ. | ரூ. |
| பொதுவான கணக்காய்வு செலவுகள் | (165,600.00) | - |
| குறுகியகால நிகழச்சித்திட்டங்கள் | (153,000.00) | - |
| கருத்திட்டச் செலவுகள் -ILO | (150,000.00) | - |
| அமைச்சு கணக்குகள் | (56,000.00) | - |
| **மொத்தம்** | **(524,600.00)** | - |

4.0 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

C - 87 ' ........

A

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | එල්ඊඩබ්/ඊ/එන්අයිඑල්එස්/එෆ්ඒ/2016 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2017 නොවැම්බර් 30 දින |

ශ්‍රම අධ්‍යයන ආයතනය
28 DEC 2017

සභාපති,

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය

**ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනයේ 2016 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2017 සැප්තැම්බර් 24 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ ඉංග්‍රීසි හා දෙමළ අනුවාද මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්. ප්‍රේමනන්ද

අතිරේක විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට.

පිටපත් : 1. ලේකම් - කම්කරු, වෘත්තීය සමිති සබඳතා හා සබරගමුව සංවර්ධන අමාත්‍යාංශය

2. ලේකම් - මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. } ஏல்ஈடபிள்யூ/ஏ/என்ஐஎல்எஸ்/எவ்ஏ/2016

මබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2017 செப்தெம்பர் 24

தலைவர்
தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம், 2017 ஜுலை 14 இல் ஒரு விரிவான அறிக்கை அதன் நிறுவன தலைவருக்கு வழங்கப்பட்டது

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை

கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் அடையாளப்படுத்தப்படவேண்டிய நிலையான வைப்புகளில் முதலிடப்பட்டிருந்த ரூபா 10,393,205 ஆன தொகையொன்று தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐக்கிய நாடுகளின் மகளிர் திட்டம் (ஐ.நா. மகளிர் திட்டம்) 2017 இற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மானியத்தொகை ரூபா 531,244 நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களிலிருந்து கழித்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 06 நிலையான வைப்புக்கள் தொடர்பான வட்டி ரூபா 315,112 ஆன தொகையும் அதில் கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரி ரூபா 8,080 ஆன தொகையும் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

2016 ஆம் ஆண்டுக்கான இருப்பு சரிபார்த்தல் அறிக்கையின்படியான இருப்பு மீதிகளை பொருள் இருப்பு பதிவேட்டுடன் ஒப்பிடும்போது, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான 27 பொருள் வகைகள் தொடர்பில் 169 உருப்படிகள் பற்றாக்குறையாகவும் 118 உருப்படிகள் மிகையாகவும் இருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு | சட்டத்தின் உப பிரிவு 4 இல் விபரிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தொழிற்சங்க கற்கைப்பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்க பொது நிதிகள் சுற்றறிக்கை | |
| (i) 3.1.5 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டின் பெப்ரவரி 26 இன் முன்னர் நிறுவனம் பொருட்களை அகற்றுவதற்கு(D), திருத்தியமைப்பதற்கு(R), விற்பதற்கு(S), மற்றும் இடமாற்றுவதற்கான (T) அவசியமான நடவடிக்கைகளை எடுத்திருந்தபோதிலும், 2015 இல் அகற்றுவதற்கென அடையாளம் காணப்பட்ட பொருட்கள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 3.1.6 ஆம் பிரிவு | முந்தைய ஆண்டு நடத்தப்பட்ட இருப்பு சரிபார்ப்பு அறிக்கைகள் ஒவ்வொரு வருடமும் மார்ச் 17 ஆம் திகதியின் முன்னதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பொது நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டி இருப்பினும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 329,186 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,233,658 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 904,473 வீழ்ச்சியைக் காட்டியது. வருமானம் ரூபா 11,864,908 இனால் அதிகரித்திருந்த போதிலும், செலவினம் ரூபா 10,053,531 இனால் அதிகரித்தமையும் திறைசேரியிடமிருந்து மீண்டெழும் மானியம் ரூபா 2,715,850 இனால் குறைவடைந்தமையும் நிதி விளைவின் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டுடன் கடந்த நான்கு வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2012 ஆம் ஆண்டில் நிதி விளைவுகள் ரூபா 4,543,546 மிகையாக இருந்ததுடன் 2016 இல் ரூபா 329,186 ஆக வேறுபட்டது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளுமிடத்து 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 5,886,439 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டு வரையில் ரூபா 2,458,919 வரை குறைவடைந்திருந்த போதிலும் 2014 இலிருந்து 2016 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டு காலத்தில் ரூபா 8,982,859 ஐ பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தொழிற்கற்கைகள் தேசிய நிறுவகத்தை தாபித்தல், நிறுவன நிருவாகத்திற்கான ஆளுநர் சபையை தாபித்தல், தொழில்நுட்ப குழு மற்றும் தொழிற்ச்சங்க கற்கைகள் பிரிவு ஒன்றை தாபித்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல், மெய்மையாய்வை நடாத்துதல் மற்றும் இலங்கையில் தொழில் கல்வியை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக அல்லது அதற்கு இணையான விடயங்களை நிறைவேற்றுதல் என்பன தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பிரதான நோக்கமாகும். நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலக மற்றும் தகவல் சேவையை தாபிப்பதும் பராமரிப்பதும் முதன்மை நோக்கமாக இருந்த போதிலும், முறையான நூலகமொன்றைத் தாபித்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

(ஆ) தொழிற்கற்கைகள் தொடர்பான சஞ்சிகைகள், நாட்குறிப்புக்கள், பருவ வெளியீடுகள் மற்றும் புத்தகங்களைப் பிரசுரித்தல் என்பன சட்டத்தின் ஒரு நோக்கமாக இருந்த போதிலும், அவற்றிற்கான தந்ரோபாய நிகழ்சித்திட்டங்களை நிறுவனம் கொண்டிருக்கவில்லை

ஒட்டுமொத்த விடயங்களின் பிரகாரம் நிறுவகம் உருவாக்கப்பட்டதன் ஏழு பிரதான நோக்கங்களுக்கிடையே, 05 நோக்கங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்திருந்த போதிலும், அதிகாரச்சட்டத்தின் இரண்டு பிரதான நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு 2017 ஜுன் 30 வரை நியாயமான படிகளை முகாமை எடுத்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அலுவலக வளாகம் தொடர்பான வாடகை ஒப்பந்தம் 2016 மே 31 இல் நிறைவடைவதுடன் 2017 ஜுன் 30 வரையிலும் உரிமையாளருடன் எழுத்து மூலமான ஒரு புதிய உடன்படிக்கை இன்றி, 2016 ஜுன் தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலத்திற்கான வாடகையாக ரூபா 2,450,000 செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சொந்தமான வேன் வாகனமொன்று முறையாக நிறுவனத்தினால் கையேற்கப்படாததுடன் 2016 ஜனவரி 27 இலிருந்து பயனின்றி நிறுவன வளாகத்தில் பேணப்பட்டுள்ளது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2016 இல் நிறுவன கற்கைகளின் பங்கேற்பாளர்களுக்கு உணவு வழங்குவதற்கென கொள்ளல் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்தை விடுத்து, ரூபா 1,918,340 ஆன தொகையிலான உணவுப்பொருட்கள் வேறொரு நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கற்கை பங்கேற்பாளர்கள் அவர்களின் மதிப்பீட்டு தாள்களில் அவ்உணவுகள் நல்ல தரத்தில் இல்லை என குறிப்பிட்டிருந்தார்கள். அவ்வாறான பதில்களினால் மீள கேள்வி கோருவதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை அதே வழங்குனரிடமிருந்து உணவு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரிவு 4(உ) அமைவாக சம்பந்தப்பட்ட அதிகாரசபையிடமிருந்து அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் மிகை பணத்தை ஆபத்தற்ற பகுதிகளில் முதலீடு செய்து வருமானத்தை உழைத்திருக்க முடிந்த போதிலும், மீளாய்வாண்டின் போது சராசரி மாதாந்த மீதி ரூபா 20.7 மில்லியன் மீது கவனம் செலுத்தபடாமல் நிறுவனத்தின் நடைமுறைகணக்கில் பேணப்பட்டுள்ளது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஜூலை 29 திகதிய டீஎம்எஸ்/ஈ3/39/7/001/1 இலக்க கடித்திற்கமைவாக, அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 45 ஆக இருந்த போதிலும், உண்மை எண்ணிக்கை 16 ஆக இருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 29 இல், 06 பதவி வெற்றிடங்கள் உயர் முகாமை தொடர்பாக இருந்தது. அவ்வாறான உயர் முகாமை தொடர்பான அதிக வெற்றிடங்கள் இருந்தமை நிறுவன நோக்கங்களை அடைவதற்கு தடையாக இருந்தது.

(ஆ) அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்யாத ஒரு பெண் அலுவலர் நிறுவனத்தின் கணக்காளர் நிலையுடைய கடமைகளை 2011 இலிருந்து செயலாற்றியிருந்தார். குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கென பொறுப்பாக இருந்த அலுவலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளக கணக்காய்வு**

நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளரின் பதவி உள்ளடக்கப்பட்ட இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை இப்பதவி

வெற்றிடமாக காணப்பட்டது. இப்பதவிக்கு நபரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படாததனால் தொடர்புபட்ட அமைச்சினால் ஒரு உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டிருந்த போதிலும், அது போதுமான எல்லா பரப்பினையும் உள்ளடக்கி நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

2016 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்ட கொள்ளல் திட்டத்தினை விஞ்சிய ரூபா 1,242,437 பெறுமதியிலான பொருட்களை நிறுவனம் கொள்வனவு செய்திருந்தது.

**5.3 பாதீட்டு கட்டுப்பாடு**

பாதீடு மற்றும் உண்மை தொகைகளுக்கிடையில் 15 சதவீதம் தொடக்கம் 308 சதவீதம் வரை முரண்களின் வீச்சு அவதானிக்கப்பட்டமை முகாமைத்துவ கட்டுப்பாட்டுக்கான ஒரு வினைதிறனான கருவியாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை காட்டுகின்றது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப் பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | (i) அனுமதிக்கப்பட்ட பதவியணிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்பு வதற்கு முகாமையினால் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) கொள்ளல் மற்றும் களஞ்சிய நடவடிக் கைகளின் மத்தியில் கடமைப்பகிர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிலையானச்சொத்து நிர்வாகம் | சரியான நேரத்திற்கு வருடாந்த மெய்மையாய்வு சேவையை நடத்துவதற்கு தவறியமை மற்றும் அகற்றல் தொடர்பான நெறிப்படுத்தல்கள் நிறைவேற்றப்படாமை. |
| (இ) | தகவல் தொழிநுட்ப பொதுக்கட்டுப்பாடு | நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற கற்கைகள் தொடர்பில் தரவுத்தளம் ஒன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இருப்பு கட்டுப்பாடு | (i) நுகர் பொருள் பதிவேடு இற்றைப்படுத்த தவறியமை மற்றும் பொருள் வழங்கல் உரிய முறையின் கீழ் அமுல்படுத்தப்படாமை.<br>(ii) நன்கொடைகளாக பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்கள் தொடர்பில் வழங்கல் கட்டளைகளை பெறுவதற்கும் பெறுகை குறிப்புக்களை அனுப்புவதற்கும் தவறியமை. |

எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி